குவைத் நாட்டின் மங்காப் தீ விபத்தில் 49 பேர் உயிரிழப்பு!

# தீ விபத்தில் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பின் உதவிடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அயலக தமிழர் நலத்துறைக்கு உத்தரவு!

சென்னை, ஜூன் 13-

குவைத் நாட்டின் மங்காப்பில் நடந்த தீ விபத்தில் 49 பேர் பலியாகியுள்ளதாகவும், அத்தீவிபத்தில் தமிழர்கள் எவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின், விவரங்கள் பெற்று அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்க முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் நலத்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து அயலகத் தமிழர் நலத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :

குவைத் நாட்டின் மங்காப் என்ற இடத்தில் தொழிலாளர்கள் தங்கியிருந்த கட்டிடத்தில், நேற்று (12.06.2024) அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்து காரணமாக, சுமார் 49 நபர்கள் உயிரிழந்திருப்பதாக தகவல் வரப்பெற்றுள்ளது. அவர்களுள் எவரேனும் தமிழர் உள்ளனரா என்ற தகவல் சேகரிக்கப்பட்டு வருகிறது. தீ விபத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் மற்றும் விபத்தில் காயமடைந்தவர்கள் குவைத் நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விபத்தில் தமிழர்கள் எவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்தம் விவரங்களைப் பெற்று, அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்க அயலகத் தமிழர் நலத்துறைக்கு உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படி அயலகத்தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம், குவைத் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம் மற்றும் அங்குள்ள தமிழ் அமைப்புகளைத் தொடர்பு கொண்டு விபத்தில் சிக்கிய தமிழர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் கிடைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இவ்விபத்து தொடர்பான விவரங்களுக்கு அயலகத் தமிழர் நலத்துறையின் கீழ்க்காணும் உதவி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தியாவிற்குள் +91 1800 309 3793

வெளிநாடு +9180 6900 9900, +9180 6900 9901

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

நீர்த்தேக்கங்கள், ஏரிகள், கண்மாய்கள், குளங்கள், கால்வாய்களில் கட்டணமின்றி

# விவசாய - பானைத் தொழில் பயன்பாட்டிற்கு மண், வண்டல் மண், களி மண் வெட்டி எடுக்க அனுமதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 13-

மாநிலமெங்கும் உள்ள நீர்த்தேக் கங்கள், ஏரிகள், கண்மாய்கள், குளங்கள், கால்வாய்களிலிருந்து, வட்டாட்சியர் அளவிலேயே எளிய முறையில் அனுமதி பெற்று, கட்டணமின்றி, விவசாயப் பயன்பாட்டிற்கும் பானைத் தொழில் செய்வதற்கும் மண், வண்டல் மண், களிமண் வெட்டி எடுக்க அனுமதித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணை வெளியிட்டுள்ளார்.

பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை பராமரிப்பில் உள்ள கண்மாய்கள், குளங்கள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்களிலிருந்து விவசாயப் பயன்பாட்டிற்கும் மற்றும் பானைத் தொழில் செய்யவும் மண், வண்டல் மண், களிமண் எடுக்க மாவட்ட ஆட்சியர்களால் அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இருந்த நல்ல மழைப் பொழிவால் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளில் நீர் தேங்கி இருந்த நிலையில், வேளாண் பெருமக்கள், மண்பாண்டம் செய்பவர்கள் போன்றோர் மண் எடுத்து பயன்பெற்றிட இயலாத சூழ்நிலை இருந்தது. தற்போது இந்த நீர்நிலைகளில் நீர் இருப்பு குறைவாக இருக்கக் கூடிய சூழ்நிலையில், இவற்றை தூர்வாரி, கொள்ளளவை உயர்த்தினால், வரும் மழைக்காலத்தில் அதிக அளவு மழை நீரை சேமிக்க இயலும். இவ்வாறு மண்எடுத்து விவசாயப் பயன்பாட்டிற்காக பயன்படுத்திட விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் பல வரப்பெற்றுள்ளன.

தற்போதுள்ள விதிகளில், விவசாயப் பயன்பாட்டிற்கும், பானைத் தொழில் செய்வதற்கும் அதே கிராமத்திலோ அல்லது அருகில் உள்ள கிராமப் பகுதியிலோ உள்ள நீர்நிலைகளிலிருந்து மட்டுமே மண் எடுக்க மேற்படி வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனால், பல தகுதியான பயனாளிகளுக்கு தேவையான மண் கிடைக்காத நிலை உள்ளது. மேலும், மேற்கூறிய பயன்பாடுகளுக்கு அனுமதி பெற சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் சான்றிதழ் பெற்று, மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பித்து அனுமதி பெற்று மண் எடுக்க இயலும். இதனால், பயனாளிகளுக்கு சிரமங்கள் ஏற்படுகின்றன.

விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் போது, மேற்கூறிய பிரச்சனைகளையும் களைந்து புதிய எளிதான நடைமுறையை வகுத்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இதன் அடிப்படையில், சிறுகனிம விதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, பொதுப்பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை பராமரிப்பில் உள்ள கண்மாய்கள், குளங்கள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள், மற்றும் கால்வாய்களிலிருந்து கட்டணம் இல்லாமல் விவசாயப் பயன்பாட்டிற்கும் மற்றும் பானைத் தொழில் செய்வதற்கும் மண் எடுக்க சம்மந்தப்பட்ட வட்டாட்சியர்களே இணைய வழியில் அனுமதி வழங்கும் வகையில் புதிய நடைமுறை செயல்படுத்தப்படும். இது மட்டுமன்றி, விவசாயிகள் தாம் வசிக்கும் வட்டத்தில் உள்ள எந்த ஒரு நீர்நிலையிலும் தேவைப்படும் மண்ணை எடுத்துக் கொள்ளவும் இந்த புதிய நடைமுறையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய நடைமுறைகளைப் பயன்படுத்தி வேளாண் பெருமக்கள் அனைவரும் இணைய வழியில் விண்ணப்பம் செய்து, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அளவிலேயே அனுமதிகளை எளிதில் பெற்று, தாம் வசிக்கும் வட்டத்தில் உள்ள எந்த ஒரு நீர்நிலையில் இருந்தும் தேவைப்படும் மண்ணை எடுத்து, தமது வயல்களை வளம் பெறச் செய்யலாம்.

முதலமைச்சர் அவர்களின் இந்த முன்னோடி அறிவிப்பால், வேளாண் பெருமக்கள் அனைவரும் எளிதில் பயன்பெறுவதோடு, மாநிலத்தில் உள்ள நீர்நிலைகளின் கொள்ளளவை உயர்த்தி அதிக மழைநீரைச் சேமித்திடவும் வழிபிறக்கும்!

---

சேலம் மாவட்டம், வலசையூர் அருகே சுக்கம்பட்டி கிராமத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன்.13-

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், வலசையூர் அருகே சுக்கம்பட்டி கிராமத்தில், அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் நேற்று (12.06.2024) காலை சுமார் 10.40 மணியளவில் அரூரில் இருந்து சேலம் நோக்கி சென்ற லாரி ஒன்றின் பின்னால் இரண்டு இருசக்கர வாகனங்களில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது, ஆச்சாங்குட்டப்பட்டியிலிருந்து சேலம் நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பேருந்து எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் இருசக்கர வாகனங்களில் பயணம்செய்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நில அளவையராக பணிபுரிந்துவந்த முருகன் (வயது 30) த/பெ.ராஜி மற்றும் அவரது மனைவி திருமதி.நந்தினி (வயது 25) மற்றும் பூவனூரைச் சேர்ந்த திருமதி. வேதவள்ளி (வயது 28) க/பெ.லட்சுமணன் ஆகிய மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், இவ்விபத்தில், முருகன் மற்றும் திருமதி. நந்தினி தம்பதியரின் ஒரு வயது குழந்தை கவின் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தது என்ற துயரகரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையுமடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---



சென்னை, கிண்டியில் உள்ள தேசிய முதியோர் நல மருத்துவ மையத்தில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சேவையினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.தேரணிராஜன், தேசிய முதியோர் நல மருத்துவமனை இயக்குநர் மரு.தீபா, கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இணை இயக்குநர் மரு.மணவாளன், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள், மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.

---

# ஒரு கேள்வி; ஒரு பதில்!



**கேள்வி :** ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்ட அமித்ஷாவுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுச் சென்ற தமிழிசையை அழைத்து, ஒரு விரலை சுட்டிக் காட்டி அதனை எச்சரிப்பது போல ஆட்டி, கண்களில் கோபம் தொனிக்க, அமித்ஷா ஏதோ கூற, அம்மையார் பயந்து ஒடுங்கி நின்றாரே; பார்த்தீர்களா? அந்தக் காட்சி எப்படித் தோன்றியது?



**பதில் :** ‘ஒரு விரல் புரட்சி’ என்பதுபோல அது ‘ஒரு விரல் மிரட்சி’யாகவே தென்பட்டது; ‘புலியை முறத்தால் அடித்து விரட்டிய தமிழ்ப் பெண்ணின் பரம்பரையில் வந்தவள் நான்’ - என ஒரு கால கட்டத்தில் வீரவசனம் பேசிய அவர், அமித்ஷா முன் கிலி பிடித்து நின்ற காட்சியைக் கண்ட போதும், செய்தியாளர்கள் அம்மையாரிடம் ஆர்வத்துடன், ‘மேடையில் என்ன நடந்தது?’ என்று கேட்க ஓடி வந்தபோது, அவர்களிடம் இருந்து தப்பிக்க ஒரு செயற்கைத்தன சிரிப்பைச் சிந்தியவாறு ஓடியபோதும் ‘**அடிமையின் உடம்பில் ரத்தம் எதற்கு?**’... என்ற பாடல் வரிகள்தான் நம் நினைவில் ஓடியது.

---

## சட்டப்பேரவை இடைத்தேர்தல் – 2024

# விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதிக்கான தேர்தல் பணிக்குழு

## தலைமைக் கழகம் அறிவிப்பு !

வருகிற ஜூலை 10 அன்று நடைபெற உள்ள விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், தலைமைக் கழகத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்திடவும் - தொகுதிகளில் நடைபெற வேண்டிய பணிகளைத் தலைமைக் கழகம் சார்பில் கவனித்திடவும் “தேர்தல் பணிக்குழு” பின்வருமாறு நியமிக்கப்படுகிறது.

### விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் பணிக்குழு

மாண்புமிகு **க.பொன்முடி** (துணைப் பொதுச்செயலாளர், தி.மு.க.)

**எஸ்.ஜெகத்ரட்சகன்**, எம்.பி., (கொள்கைப் பரப்புச் செயலாளர், தி.மு.க.,)

| | |
|---|---|
| காணை மத்திய ஒன்றியம் | : **மாண்புமிகு கே.என்.நேரு,** (முதன்மைச் செயலாளர், தி.மு.க.) |
| விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் | : **மாண்புமிகு எ.வ.வேலு** |
| விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் | : **மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** |
| காணை வடக்கு ஒன்றியம் | : **மாண்புமிகு அர. சக்கரபாணி** |
| கோலியனூர் மேற்கு ஒன்றியம் | : **மாண்புமிகு தா.மோ.அன்பரசன்** |
| விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் | : **மாண்புமிகு எஸ்.எஸ்.சிவசங்கர்** |
| விக்கிரவாண்டி பேரூர் | : **மாண்புமிகு சி.வி.கணேசன்** |
| காணை தெற்கு ஒன்றியம் | : **மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி,** |
| | : **டாக்டர் ஆர். லட்சுமணன், எம்.எல்.ஏ.,** |

**குறிப்பு : ஜூன் 14ஆம் தேதி அன்று மாலை, விக்கிரவாண்டியில் உள்ள “ஜெயராம் திருமண மண்டபத்தில்” நடைபெறவுள்ள தொகுதி செயல்வீரர்கள் கூட்டத்தில் மேலே குறிப்பிட்ட தேர்தல் பணிக்குழுவினர் மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பர்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12.6.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.